சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ / மாணவியருக்கு கட்டாய, திருப்பி செலுத்தப்படாத அனைத்து கல்வி கட்டணங்களை வழங்கி ஆணை வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.6, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 9.1.2012–க்கு திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை (நிலை) எண்.52

நாள் : 11.08.2017
ஹேவிளம்பி வருடம் ஆடி 26, திருவள்ளுவர் ஆண்டு 2048
படிக்கப்பட்டது.

அரசாணை (நிலை) எண்.6, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 9.1.2012

*******

ஆணை :–

அரசாணை (நிலை) எண்.6, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை, நாள் 9.1.2012–க்கு கீழ்க்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது.

திருத்தம்

மேற்கண்ட அரசாணையில் பத்தி 3–ல் உள்ள

> "அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு "அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக் குழு" நிர்ணயித்த திருப்பி செலுத்தப்படாத கட்டாய கட்டணம் அனைத்தையும்"

என்ற சொற்றொடருக்குப் பதிலாக

> "சுயநிதி கல்லூரிகளில் அனுமதிக்கப்படும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் சேரும் தகுதியுடைய ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்து பயிலும் தகுதியுடைய மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் கல்விக்கட்டண தொகைக்குமிகாமல்"

என்ற சொற்றொடர் சேர்க்கப்படுகிறது.

2 மேற்கண்ட திருத்தம் 2017-18ஆம் கல்வியாண்டு முதல் சேர்க்கப்படும் புதிய மாணாக்கர்களுக்கு மட்டும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஏற்கெனவே கல்வி உதவித்தொகை பெற்று வரும் மாணாக்கர்களுக்கு இத்திருத்தம் பொருந்தாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப.அண்ணாமலை,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.

இயக்குநர், பள்ளி கல்வித்துறை, கல்லூரி சாலை, சென்னை-6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
மாநில கணக்காயர், சென்னை 6/18 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு) சென்னை-5.
சம்பளகணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1.
உதவி சம்பளக் கணக்கு அலுவலர்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்:-

நிதித் (ஆதி(ம)பந/வ.செ.பொது-II) துறை, சென்னை-9.
பள்ளி கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (ஆதி(ம)பந) துறை அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

16/8/17
பிரிவு அலுவலர்
16/8/17